| |
|---|
| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai |
| Date: 11.02.2026 |
| CC No.97/2023 |
| சாட்சி : PW3 |

| | |
|---|---|
| பெயர் : திரு. பொன்முருகன் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு.பொன்ராஜ் | தொழில் : காவலர் |
| கிராமம் : சென்னை | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 29/2026 |
| ( எதிரி ஆஜர் இல்லை , குவிமுச 317– ன் படி மனுதாக்கல், வழக்கறிஞர் ஆஜர்) | |

-----------------------------------------------------------

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1. நான் தற்போது சென்னை பொருளாதார குற்றப்பிரிவில் இரண்டாம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கின் எதிரி அழகரை தெரியும். 18.06.2021 அன்று நானும், எதிரி அழகரும் சென்னையிலிருந்து மதுரைக்கு அலுவலக பணியாக TN 07 BG 1234 என்ற ஸ்கார்பியோ வாகனத்தில் சென்றோம். அந்த வாகனத்தை அழகர் ஓட்டினார். துவரங்குறிச்சி பிரிவு சாலை சென்ற போது தீடீரென ஒரு நபர் இருசக்கரவாகனத்தில் போன் பேசிக்கொண்டு பிரிவு சாலையிலிருந்து வந்து எதிர்பாராதவிதமாக எங்கள் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அதில் அவருக்கு காதில் இருந்து இரத்தம் வந்ததது. நாங்கள் எங்களது வாகனத்தை ஓரமாக நிறுத்திவிட்டு அவரை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். எதிரியின் அஜாக்கிரதையினாலும், அதிவேகத்தாலும் இந்த விபத்து ஏற்படவில்லை. இறந்த நபரின் கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பு சாட்சி பகுதியாக அரசு தரப்பு சாட்சியத்தை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் அரசு தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

2. விபத்து சமயத்தில் நானும், எதிரி அழகரும் ஒன்றாக வேலை பார்த்தோம்

என்றால் சரிதான். மேற்சொன்ன விபத்தானது எதிரியின் அதிவேகத்தாலும், அஜாக்கிரதையினாலும், கவனக்குறைவினாலும் வாகனத்தை ஓட்டி வந்து TN 63 AE 6241 என்ற HONDA DREAM வாகனத்தின் மீது மோதிவிபத்து ஏற்பட்டது என்றும் அதில் அந்த வாகனத்தில் வந்த வெங்கடாசலம் என்பவர் இறந்துவிட்டார் என்றும் சம்பவத்தை நேரில் பார்த்தாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு எதிரி நண்பர் என்பதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**3.** நாங்கள் சென்ற வாகனம் காவல் வாகனம் என்றால் சரிதான். அதில் வேககட்டுப்பாடு கருவி பொருத்தப்பட்டு 80 கி.மீ வேகத்திற்கு மேல் செல்ல முடியாது என்றால் சரிதான்.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.